6. அரசினர் தீர்மானம்

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறும் கூட்டத்தை 12—2—1981ஆம் தேதியோடு முடித்துக் கொள்ளலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடியால், பேரவை 25(1) விதியின்படி, பேரவை ஒத்திவைக்கப் பெற்று, மீண்டும் பிப்ரவரி திங்கள் 26ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11–00 மணிக்கு கூடலாம் என்ற தீர்மானத்தை மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர். பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் 26—2—1981 வியாழக்கிழமை காலை 11·00 மணிக்கு கூடும்.

பின்னர் பேரவை மாலை 5·05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

202. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வேளாண்மைத் துறையின் 21—6—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1175 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

203. 16—7—1980 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம்-3, பிரிவு1(அ), பக்கம் 391-ல் வெளியிடப் பெற்ற வேளாண்மைத் துறையின் எஸ். ஆர். ஓ./ஏ.197/80-ஆம் எண் அறிவிப்பிற்கு வேளாண்மைத் துறையின் 4—11—1980ஆம் தேதியிடப் பெற்ற 83788/ஏ.எம்./3/80/4 ஆம் எண் கடிதத்தில் வெளியான பிழை திருத்தம் [தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

204. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1980 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்). (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 'அ' பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]